2023 அக்டோபர் மாதம் 10– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 34 / 2020*

*2023 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. S.மகாலட்சுமி,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, ராஜ்குமார் |
| தகப்பனார் பெயர் | : | சின்னசாமி |
| ஊர் | : | நான்கு ரோடு, துறைமங்கலம், |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | துணைப்பதிவாளர் ( கூட்டுறவு) |
| வயது | : | 57 |

தேதி: 10.10.2023.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது சார்பாக முதல் தகவல் அறிக்கை அசல் ம.சா.ஆ.1, பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் வழங்கிய C T Scan Facial Report அசல் ம.சா.ஆ.2, 22.12.2019 முதல் 02.01.2020 வரை திருச்சி கேஎம்சி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று அசல் ம.சா.ஆ.3, 29.01.2020 முதல் 30.01.2020 வரை திருச்சி கேஎம்சி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு சான்று அசல் ம.சா.ஆ.4, புறநோயாளி மருத்துவ குறிப்பு அசல் ம.சா.ஆ.5, Scan Report அசல் ம.சா.ஆ.6, மனுதாரர் ராஜ்குமாரின் காயச்சான்று உண்மை நகல் ம.சா.ஆ.7, திருச்சி கேஎம்சி மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ பில்கள் ம.சா.ஆ.8, 1–ம் எதிர்மனுதாரர்

வாகனத்தின் பதிவுப்புத்தகம் நகல் ம.சா.ஆ.9, 1–ம் எதிர்மனுதாரர் வாகன காப்பீட்டு நகல் ம.சா.ஆ.10, 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.11, 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் ம.சா.ஆ.12, மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.13, மனுதாரரின் Pan Card ம.சா.ஆ.14, மனுதாரருக்கு 2019–நவம்பர் மாதம் வழங்கிய சம்பளச்சான்றிதழ் நகல் ம.சா.ஆ.15, கார் வாடகை ரசீது நகல் ம.சா.ஆ.16, ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**ஒப்பம்/– எம். மூர்த்தி,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**